செ.வெ.எண். 96 நாள்.19.02.2018.

திருநெல்வேலி மாவட்டம் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதார திட்டத்தின் கீழ், 12 கூட்டுப் பொறுப்பு குழுக்களுக்கு ரூ.28.00 இலட்சம் மதிப்பிலான தொழில் கடனுதவி, தாய்லாந்தில் நடைபெறும் மாற்றுத்திறனாளிகளுக்கான அமர்வு கைப்பந்து போட்டியில் பங்குபெறும் மாற்றுத்திறனாளிக்கு ஊக்கத் தொகை, 2 நபர்களுக்கு பணி நியமன உத்தரவினையும், 2 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (19.02.2018) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தாய்லாந்து பாங்காங்கில் நடைபெறும் மாற்றுத்திறனாளிகளுக்கான அமர்வு கைப்பந்து போட்டியில், பங்குபெற உள்ள மாற்றுத்திறனாளி திரு.சுந்தரகணேசன் என்பவருக்கு ஊக்கத் தொகை ரூ.59,880/– வழங்குவதற்கான உத்தரவினையும், மாவட்ட செயலாக்க அலுவலகம் மூலம் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ், கரைசுத்து உவரி, கரைசுத்து நவ்லடி பகுதியைச் சார்ந்த 12 கூட்டுப் பொறுப்பு குழு உறுப்பினர்களுக்கு ரூ.28 இலட்சம் மதிப்பில் தொழில் கடனுதவிகளையும், 2 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவுகளையும், திருநெல்வேலி பேட்டை–2 கிராம உதவியாளராக பணிபுரிந்த திரு.ச.முத்து என்பவருக்கு கிராம நிர்வாக அலுவலராக பதவி உயர்வுக்கான உத்தரவினையும், அம்பாசமுத்திரம் கிராம உதவியாளராக பணியாற்றி மரணமடைந்த திரு.சண்முகவேல் என்பவரது மகள் செல்வி.ச.ஆறுமுகலெட்சுமி என்பவருக்கு கருணை அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிவதற்கான பணிநியமன உத்தரவினையும் வழங்கினார்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை மற்றும் குடிநீர், சாலை வசதிகள் வேண்டி பல்வேறு மனுக்கள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டு, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சிகளில் சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.எஸ். சங்கரலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை உதவி திட்ட அலுவலர் திரு.ராஜசேகரன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி.சாந்திகுளோரி எமரால்ட், மாவட்ட செயலாக்க அலுவலர் திரு.பரணபாஸ்கரன், மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் திரு.சிவகுமார், துணை ஆட்சியர்கள் (பயிற்சி) திருமதி.மயில், செல்வி.லெட்சுமி பிரியா, மாவட்ட செயலாக்க அலுவலக கண்காணிப்பு அலுவலர் திரு.பேச்சிமுத்து மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.